# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை – 2023

| தரம்:11 | வரலாறு I | ஒரு மணித்தியாலம் |
|---|---|---|

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

1. மகாவம்சம் என்னும் நூலின் சிறப்பம்சமாகக் கருதக்கூடியது.
   1. இலங்கையின் வரலாற்றை முழுமையாகக் குறிப்பிட்டுள்ளமை.
   2. மேலும் விளக்கமளிக்கும் வகையில் "டீகாவ" எனும் உரை நூல் எழுதப்பட்டுள்ளமை.
   3. பௌத்தமதம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை.
   4. பல பகுதிகளாக எழுதப்பட்டுள்ளமை.

2. இலங்கையின் பௌத்த சாசன வரலாற்றிற்கு முதலிடம் வழங்கி எழுதப்பட்டுள்ள நூல்.
   1. இராஜாவலிய 2. மயூர சந்தேசய 3. நிஹாய சங்கிரஹ 4. பெரகும்பா சிரித்த

3. இலங்கை பற்றிக் குறிப்பிட்டுள்ள தேசசஞ்சாரிகள் நிரல் "A" யிலும் அவர்கள் வாழ்ந்த நாடு நிரல் "B" யிலும் தரப்பட்டுள்ளது. நிரல் "A" யினை நிரல் "B" யுடன் தொடர்புபடுத்தும் போது காட்டும் சரியான விடைத் தொகுதி.

| **நிரல் "A"** | **நிரல் "B"** |
|---|---|
| 1. மெகஸ்தனிஸ் | A. உரோம் |
| 2. பாஹியன் தேரர் | B. கிரேக்கம் |
| 3. பர்னாவோ டீ குவேரோஸ் | C. சீனா |
| 4. பிளினி | D. போர்த்துக்கல் |

   1. A,B,C,D 2. B,C,A,D 3. D,B,C,A 4. B,C,D,A

4. வரலாற்று அறிவைப் பெற்றுள்ள மாணவன் என்ற அடிப்படையில் எமது நாட்டின் தனித்துவத்தினை எடுத்துக் காட்டும் செயற்பாடாகக் கருதக் கூடியது.
   1. நாட்டின் வரலாற்றினை அறிந்திருக்க வேண்டும்.
   2. தொல்பொருட்களைப் பாதுகாக்க வேண்டும்.
   3. வரலாற்றினை வெளிநாட்டவருக்கு தெரியப்படுத்த வேண்டும்.
   4. வெளிநாட்டு தேசசஞ்சாரிகளின் அறிக்கை மற்றும் நூல்களைப் பாதுகாக்க வேண்டும்.

5. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த சூழலியல் வலயங்களின் பரம்பலைத் தீர்மானித்த பிரதான காரனி.
   1. வெப்பநிலையின் வேறுபாடு 2. மழை வீழ்ச்சியின் வேறுபாடு
   3. மன்னின் வேறுபாடு 4. இயற்கை வளங்களின் பரம்பல்

6. முன் வரலாற்றுக் கால வாழ்க்கை முறையினை ஓரளவேனும் அறிய உதவும் உடரஞ்சாமடம எனும் குடியிருப்பு அமைந்துள்ள மாகாணம்.
   1. ஊவா மாகாணம் 2. மத்திய மாகாணம் 3. சப்ரகமுவ மாகாணம் 4. தென் மாகாணம்

7. இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியேற்றங்களின் பரம்பலானது நதிக்கரையோரங்களுக்கு அருகில் காணப்படாது அதன் வெளியே காணப்பட்டதாக நவீன தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர். அவ்வாறு தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரனியாக அமைவது.
   1. சனத்தொகை குறைவாகக் காணப்பட்டமை.
   2. நதிகளில் காணப்படும் நீர் விவசாயத்திற்கு ஏற்றதாகக் காணப்பட்டமை.
   3. ஆறுகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவு காணப்படாமை.
   4. நதிக்கரையை அண்டிய பிரதேசங்களிள் வளமான மண் காணப்பட்டமை.

8. உலர் வலயங்களில் குளத் தொகுதி முறை தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரனியாகக் கருதக் கூடியது.
   1. கிராமங்களுக்கடையில் நல்லுறவினைக் கட்டியெலுப்ப.
   2. வரடசியான காலங்கலில் ஏற்படும் நீர்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய.
   3. கிராமங்களுக்கிடையில் ஏற்படும் சிறு பிரச்சினைகளை இலகுவில் தீர்க்க.
   4. மக்களின் அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்ய.

9. இலங்கையின் பன்முகப்படுத்திருந்த அரசியல் பலம் குறிப்பிட்ட ஒரு நபரிடம் குவியும் செயற்பாடானது எவ் மன்னனின் காலத்தில் தோற்றம் பெற்றது.
   1. பண்டுகாபயன்  2. வசபன்  3. துட்டகைமுனு  4. தேவநம்பியதீசன்

10. எமது நாட்டின் ஆட்சியாளர்கள் முழு உலகிற்கும் அரசன் என பொருள்படும் விதத்தில் பின்பற்றிய அரச கோட்பாடு.
   1. மலையின் அரசன்  2 இந்திரலோக மகாராஜா  3. சக்கரவர்த்தி  4. நரேஸ்வரக் கடவுள்

11. புராதன நிர்வாக அமைப்பில் வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி.
   1. படகரிகா  2. பதகு  3. கொதுறு கேனா  4. நகர வடிக

12. கி.பி 9 ஆம் நூற்றாண்டளவில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் காணப்படும் குறியீடுகளில் விசிறி அடையாளத்தின் மூலம் உணர்த்தப்படுவது.
   1. தூய்மை  2. பௌத்த மதம்  3. செங்கோலும் கொடியும்  4. சௌபாக்கியம்

13. கி.பி 8 ஆம் 9 ஆம் நூற்றாண்டுகளில் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் நெருக்கமான தொடர்பினை வைத்திருந்த ஆசிய நாடு.
   1. பர்மா  2. தாய்லாந்து  3. சீனா  4. கம்போடியா

14. இரசரட்டைக் காலத்தைச் சேர்ந்த இலக்கிய நூல்களை நோக்கும் போது சிங்கள மொழியில் எழுதப்பட்ட நூலாக காணப்படுவது.
   1. சாராபிரதீப்பதி  2. அனுருத்த  3. ஜானகிஹரணய  4. சியபஸ்லகர

15. புராதன கால குளங்களில் மடைக்கதவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்ட கற்தூண் மூலம் நிறைவேற்றப்பட்ட பணி.
   1. மடைக்கதவினை சேதப்படுத்தாது பாதுகாத்தல்  2. கால்வாய்க்கு தேவையானளவு நீரை திறந்து விட
   3. குளத்தின் நீர் வெளியேறாது பாதுகாத்தல்  4. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல்

16. இரஜரட்டைக் காலத்தில் சக்தி வாய்ந்த அத்திவாரம் மற்றும் இடி மினனல் போன்ற அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட கட்டிட நிர்மாணமாகக் கருதக் கூடியது.
   1. ஜேதவனராமய  2. சீகிரியா  3. ருவான்வெலிசாய  4. அயகிரி

17. நிஸங்கமல்ல மன்னின் காலத்தில் கவ்வை என்னும் அளவீடு பயன்படுத்தப்பட்டமை.

1. காலத்தை அளவிட 2. நிறையை அளவிட 3. தூரத்தை அளவிட 4. நிலத்தை அளவிட

18. பண்டைய சமூகத்தில் குற்றவாளியொருவர் ஊரில் மறைந்திருக்கும் வேளையில் அவரைப் பிடித்துக் கொடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது.

1. கிராமத் தலைவரிடம் 2. கிராம மக்களிடம் 3. பருமகரிடம் 4. இல்லத் தலைவரிடம்

19. முதலாம் விஜயபாகு மன்னனால் நிர்வாகத் தலைநகராகப் பொலநறுவையைத் தெரிவு செய்வதில் செல்வாக்கு செலுத்திய காரனி.

1. சோழர்களினால் உருவாக்கப்பட்டமை 2. பாதுகாப்பு மற்றும் துறைமுகம் காணப்பட்டமை
3. வளமிக்க பிரதேசமாகக் காணப்பட்டமை 4. மக்கள் அதிகளவு வாழ்ந்த நகரம்

20. A. அரேபிய நாட்டவரான இபின் பதூதா எனும் தேசசஞ்சாரி வருகை தந்தமை.

B. தேவபதிராஜ எனும் அமைச்சரின் உதவியுடன் பொருளாதார, சமய, கல்வித் துறையில் வளர்ச்சி ஏற்படுத்தியமை.

C. கேகாலையின் பெலிகல மலை உச்சியில் தலாதா மாளிகையைக் கட்டியமை.

D. மலைநாட்டுப் பிரதேச ஆட்சியாளனான ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அடக்கியமை

மேலே தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களைக் கால ஒழுங்கில் சரியாகக் காட்டும் விடைத் தொகுதி

1. C,D,A,B 2. C,B,A,D 3. C,B,D,A 4. C,D,B,A

21. கி.பி 1409 ஆம் ஆண்டு சீனாவின் செங்கோ என்னும் தளபதி இலங்கை மீது ஆக்கிரமித்த போது வீர அழகேஸ்வர என்னும் ஆட்சியாளன் ஆட்சி செய்த பிரதேசம்.

1. தெதிகம 2. கம்பளை 3. இறைகம 4. கோட்டை

22. போர்த்துக்கேயரினால் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட யுத்தங்களும் அதன் போது கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னர்களும் தரப்பட்டுள்ளது. இவற்றுள் **பொருத்தமற்ற** விடை.

1. தந்துரே – முதலாம் விமலதர்மசூரியன் 2. ரந்தெனிவெல – இரண்டாம் இராஜசிங்கன்
3. பலன – முதலாம் விமலதர்மசூரியன் 4. கன்னொறுவ – இரண்டாம் இராஜசிங்கன்

23. இலங்கையில் அரசுரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெண்ணின் பங்களிப்பு முக்கியமானதாய் அமைந்திருந்தது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

1. முதலாம் விமலதர்மசூரியன் குசுமாசனதேவியை திருமணம் செய்து கொள்ளல்
2. முதலாம் விஜயபாகு கலிங்க இளவரசி திரிலோகசுந்தரியை திருமணம் செய்து கொள்ளல்
3. இளவரசன் சாலியகுமரன் அசோகமாலாவை திருமணம் செய்து கொள்ளல்
4. மகா பராக்கிரமபாகு லீலாவதியை திருமணம் செய்து கொள்ளல்

24. கண்டி இராச்சியத்தில் நடைமுறையில் உள்ள வரி வசூலிப்பு (பத்த) ஒழுங்கமைப்பின் பெயர்கள் நிரல் "A" யிலும் அவற்றால் அறவிடப்பட்ட வரிகள் நிரல் "B" யிலும் தரப்பட்டுள்ளது. நிரல் "A" யினை நிரல் "B" யுடன் தொடர்புபடுத்தும் போது காட்டும் சரியான விடைத் தொகுதி.

| **நிரல் "A"** | **நிரல் "B"** |
|---|---|
| 1. குருவே பத்த | A. போக்குவரத்துக்கான வரி |
| 2. படஹெல பத்த | B. யானை பிடித்தலுக்கான வரி |
| 3. மடிகே பத்த | C. வனைதலுக்கான வரி |
| 4. ரதா பத்த | D. சலவைக்கான வரி |

1. A,B,C,D 2. B,C,A,D 3. D,B,C,A 4. B,C,D,A

25. ஐரோப்பிய மறுமலர்சிக் காலத்தில் சித்திரக்கலையின் மத்திய நிலையமாக விளங்கிய பிரதேசம்.
   1. வெனிஸ்   2. ஜெனோவா   3. புளோரன்ஸ்   4. அலக்சாந்திரியா

- அட்டவனையில் A தொடக்கம் F வரை தரப்பட்டுள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டு 26, 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| கண்டுபிடிப்புக்கள் | கண்டுபிடிப்பாளர்கள் | நாடு |
|---|---|---|
| A- சூரியனை கோள்கள் நீள்வட்டப் பாதையில் சுற்றுதல். | C- கலிலியோ கலிலி | E- ஜேர்மனி |
| B- வியாழனைச் சூழ உப கோள்கள் உண்டு. | D- ஜொகன்ஸ் கெப்லர் | F- இத்தாலி |

26. நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ் முன்வைத்த கருத்தினை உறுதி செய்து அதனை முன்னெடுத்துச் சென்றதுடன் தொடர்புபடும் தகவலைக் காட்டும் விடை.
   1. A,C,E   2. B,C,F   3. B,D,E   4. B,C,F

27. தொலைநோக்கி கண்டுபிடித்தன் விளைவால் வானில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியுடன் தொடர்புபடும் தகவலைக் காட்டும் விடை.
   1. A,D,E   2. B,C,E   3. B,C,F   4. A,D,F

28. ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட செல்வாக்கு செலுத்திய பிரதான காரனி.
   1. நிலக்கரி மற்றும் இரும்புத்தாது காணப்பட்டமை   2. வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி
   3. கண்டுபிடிப்பாளர்கள் பலர் காணப்பட்டமை   4. செல்வந்தர்கள் பலர் காணப்பட்டமை

29. பிரித்தானியாவின் நெசவுக் கைத்தொழிலில் பாரிய மாற்றம் ஏற்பட ஏதுவாக அமைந்த காரனி.
   1. குடியேற்ற நாடுகளில் பிரித்தானிய துனிகளுக்கான கேள்வி உயர்வாகக் காணப்பட்டமை.
   2. குடியேற்ற நாடுகளளில் துனி உற்பத்தியினை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்ப்பட்டமை.
   3. பிரித்தானியாவில் இயந்திர பாவனை உயர்வாகக் காணப்பட்டமை
   4. ஆடை உற்பத்தி இலகுவில் மேற்கொள்ளக் கூடியதாகக் காணப்பட்டமை

30. கைத்தொழில் புரட்சியினால் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய விளைவு.
   1. பொதுவுடமைவாதம் தோற்றம் பெற்றமை   2. சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்மை
   3. செல்வந்தர்கள், ஏழைகள் தோற்றம் பெற்றமை   4. சூழல் மாசடைந்தமை

31. ஐரோப்பியர்கள் இலங்கையின் எந்த வர்த்தகப் பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக கடுமையான போட்டியில் ஈடுபட்டனர்.
   1. இரத்தினக் கல்   2. யானைத் தந்தம்   3. கறுவா   4. மிளகு

- கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு 32, 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
   A. தென்னை வரி விதிக்கப்பட்மை.
   B. ஒல்லாந்து நீதிமன்ற முறையை மீண்டும் அறிமுகப்படுத்தல்.
   C. வரி அறவிட அவுமில்தாரர்களை நியமித்தமை.
   D. பிரதானிகளின் உத்யோகபூர்வ பதவிகளில் மாற்றத்தினை ஏற்படுத்துதல்.
   E. சுதேச உத்தியோகத்தர்கள் மூலம் வரி வசூலித்தல்.

32. கி.பி 1797 ஆம் ஆண்டு சென்னை வர்த்தகக் கம்பனிக்கு எதிராக கரையோரப்பிரதேச மக்கள் ஏற்படுத்திய கலகத்திற்கு செல்வாக்கு செலுத்திய காரனிகளுடன் தொடர்புபடும் விடை.
1. A யும் B யும் 2. A யும் C யும் 3. A யும் E யும் 4. B யும் E யும்

33. பிரித்தானியரின் வர்த்தகக் கம்பனிக் எதிரான கரையோரக் கலகத்தினை அடக்க மியுரன் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் தொடர்புபடும் விடை.
1. B யும் E யும் 2. A யும் E யும் 3. B யும் D யும் 4. B யும் C யும்

34. கண்டி இராச்சியத்தின் சுயாதீனம் இழந்தமை பற்றி கண்டி உடண்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம்.
1. மூன்றாம் வாசகம் 2. நான்காம் வாசகம் 3. ஐந்தாம் வாசகம் 4. ஏழாம் வாசகம்

35. கி.பி 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின் விளைவாகக் கருதக் கூடியது.
1. பிரதானிகளின் அதிகாரம் குறைக்கப்பட்டமை
2. சுதேச விடயங்களை மதித்தமை
3. கடை மற்றும் நாய் வரிகளை நீக்கியமை
4. பேலி தலைமையிலான குழு நியமிக்கப்பட்டமை

- கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருத்திற் கொண்டு 36 தொடக்கம் 39 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A 1. டொரிங்டனின் புதிய வரிக்கொள்கை
  2. 1848 ஆண்டு சுதந்திரப் போராட்டம்

B 1. பெருந்தெருக்களின் உருவாக்கம்
  2. நாடுகாண் பயணங்களின் வளர்ச்சி

C 1. முதலாளித்துவம்
  2. அரசின் தலையிடாக்கொள்கை

D 1. நகரமயமாதல்
  2. சேரிப்புறக் குடியிருப்புக்கள்

36. முதலாவதின் வளர்ச்சிக்கு இரண்டாவது காரணமாக அமைந்தமை தொடர்பான கூற்று.
1. A 2. D 3. C 4. B

37. முதலாவதிற்கும் இரண்டாவதிற்குமிடையே தொடர்பின்மையைக் காட்டும் கூற்று.
1. C 2. A 3. B 4. D

38. முதலாவதின் செயற்பாடு இரண்டாவதின் தோற்றத்திற்கு காரணமான கூற்று.
1. A 2. B 3. D 4. C

39. முதலாவதின் காரணமாக இரண்டாவது தோற்றம் பெற்றமை தொடர்பான கூற்று.
1. D 2. C 3. A 4. B

40. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணம் உட்பட வடக்குப் பிரதேசத்தில் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்ட மிஷனரி இயக்கம்.
1. சேரச் மிஷனரி 2. வெஸ்லியன் மிஷனரி 3. அமெரிக்கன் மிஷனரி 4. பெப்டிஸ்ட் மிஷனரி

(40x2=80 புள்ளிகள்)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை – 2023

| | | |
|---|---|---|
| தரம்:11 | வரலாறு II | மூன்று மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு: 10 நிமிடம் |

- பகுதி I **முதலாம்** வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

**01.** (அ) கீழே **(I)** இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் இலங்கைப் படத்திலும் **(II)** இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I) இரணைமடுக்குளம், பெட்ரிக்கோட்டை, கிருந்தி ஓயா, மினிகால்கந்த, செங்கடகல, வெல்லஸ்ஸ, மாத்தளை அலுவிஹாரை, காலதித்த, பல்லவங்க, இபன்கட்டுவ, ஜோதவாவி, கன்னொருவை. (12 புள்ளிகள்)

II) சென்னை, செங்கடல், இஸ்தான்புல், பிரித்தானியா, இத்தாலி, பாரசீகவளைகுடா. (06 புள்ளிகள்)

(ஆ) I) கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. உலர்வலய மக்கள் குளத்தொகுதியை குறிப்பிட பயன்படுத்திய சொற்பிரயோகம்.

B. கி.பி 1753 ஆம் ஆண்டு கண்டியில் உபசம்பதா விழாவை நடாத்த பௌத்த தேரர்கள் வரவழைக்கப்பட்ட நாடு.

C. வானலைகள் மூலம் செய்திகளைப் பரிமாற்றம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்.

D. ஒல்லந்தருக்கு எதிரான யுத்தத்தின் போது கண்டி அரசனின் யுத்த உதவியைப் பெற்றுக்கொள்வதனை முக்கிய நோக்காக கொண்டு மன்னனை சந்தித்த பிரித்தானிய தூதுக் குழு. (04 புள்ளிகள்)

- அருகில் காட்டப்பட்டுள்ள A.B படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் விடைத்தாளில் எழுதுக.



II) 1. A யினால் காட்டப்பட்டுள்ள நிர்மாணம்.

2. எவ் நீர்ப்பாசனக் கட்டுமானத்தை அண்மியதாகக் காணலாம்.

3. இவ் நிர்மாணத்திற்கு பண்டைய கல்வெட்டுக்களில் வழங்கப்பட்டுள்ள சொற்பிரயோகம்.

4. இதன் மூலம் ஆற்றப்படும் பணி. (04 புள்ளிகள்)



III) 1. B யினால் காட்டப்பட்டுள்ள நபரின் பெயர்.

2. இவரின் அரசவம்சம்.

3. இவரின் இயற்பெயர்.

4. இவரை அரியணை ஏற்றிய மகா பிரதாணி. (04 புள்ளிகள்)

## பகுதி II

**02.** 1. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்ததாக அடையாளங்காணப்பட்ட பின்வரும் வாழ்விடங்கள் அமைந்துள்ள சூழலியல் வலயங்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A. பத்திராஜவெல

B. சீகிரிய பொத்தான

C. பாஹியன்கல (03 புள்ளிகள்)

2. முன்வரலாற்றுக் காலத்திற்கு உரித்தான மெகாலிதிக் மரபைச் சார்ந்த பின்வரும் மயானங்கள் பற்றிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற பிரதேசங்கள் இவ்விரண்டு வீதம் குறிப்பிடுக.

A. அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம்.

B. பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடம் வடிவிலான மயானம். (04 புள்ளிகள்)

3. முன்வரலாற்றுக் காலம் மாற்றங்களுக்கான சகாப்தமாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. ஆரம்ப வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் இயல்புகளை பின்வரும் காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

A. பௌதீகப் பின்னணி

B. தொழில் ரீதியிலான பின்னணி (06 புள்ளிகள்)

**03.** 1. இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சியில் பின்வரும் நிர்வாகத்துடன் தொடர்புபடும் பதவிகளிற்கு மூலாதாரங்களில் வழங்கப்பட்டுள்ள சொற்பிரயோகங்களினை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. இல்லத் தலைவன்

B. கிராமத் தலைவன்

C. குளத்தொகுதியின் பரிபாலகர் (03 புள்ளிகள்)

2. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புபடும் ஆட்சியாளர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A. ஆட்சியின் மத்திய நிலையமாக அனுராதபுரத்தை தெரிவு செய்து நகரமாகக் கட்டியெழுப்பிய ஆட்சியாளன்.

B. அனுராதபுரத்தில் புனித வெள்ளரசு மரம் நடப்படும் வைபவதிற்கு தென்பகுதி பிரதேசத் தலைவர்கள் அழைக்கப்பட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சியாளன்.

C. சோழர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த ஆட்சியாளன்.

D. பாண்டிய வம்சத்தின் உதவியுடன் பொலநறுவையில் மூன்று முறை அதிகாரத்துக்கு வந்த அரசி. (04 புள்ளிகள்)

3. நாட்டு மக்கள் அரசனிடமிருந்து எதிர்பார்த்த பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. பண்டைய இலங்கையில் பின்வரும் பொருளாதாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை சுருக்கமாகக் குறிப்பிடுக.

A. விவசாயம்

B. கைத்தொழில் (06 புள்ளிகள்)

**04.** 1. மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட எலஹரக்கால்வாய் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளும் குளங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. கீழே A,B,C,D யில் தரப்பட்டுள்ள தகவல்களுக்குரிய விடைகளை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

A. அனுராதபுரத்தில் நிலத்தின் நுண்சாய்வினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட கால்வாய்.

B. பாரிய குளமொன்றில் நீரின் அமுக்கத்ததை சமநிலைப்படுத்தி கால்வாய்க்கு நீரை விடுவிக்கப் பயன்படுத்திய தொழினுட்ப நிர்மாணிப்பு.

C. நீர்நிலையியல் கோட்பாட்டை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பு.

D. மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாப்புப் பெற பாரிய தூபிகளின் உச்சியில் பொருத்தப்பட்ட கருவி.

**(வஜ்சுரசும்பட்ட, எலஹரக் கால்வாய், கலிங்கல் தொட்டி, கலிங்கல், தெடிகம யானை விளக்கு, ஜோத கால்வாய், அலைதாங்கி)** (04 புள்ளிகள்)

3. வரலாற்றுக் காலத்தில் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதற்கான தேவை ஏற்பட்டமைக்கான காரணத்தை இரண்டு காரணிகளுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4. A. பண்டைய இலங்கையில் வளர்ச்சியடைந்த இரும்பு பிரித்தெடுக்கும் தொழினுட்பம் காணப்பட்டதாக தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ள இரண்டு இடங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

B. அவ்விடத்தில் இரும்பு பிரித்தெடுக்காப்பட்ட விதத்தசை் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**05.** 1. கி.பி 1215 ஆம் ஆண்டு கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பின் பின் கீழே தரப்பட்டுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பு அரண்களை உருவாக்கி புத்தசாசனத்தையும் நாட்டையும் பாதுகாத்த தலைவர்களைக் குறிப்பிடுக.

A. யாப்பகூவா மலைக்குன்று

B. கோவிந்தகல மலைக்குன்று

C. மினிப்பே (03 புள்ளிகள்)

2. A. வரலாற்றுரீதியான மாயரட்டைக்குரிய இரண்டாவது நகரவாக்க ஆட்சிமையங்கள் இரண்டையும்,

B. வரலாற்றுரீதியான மலையரட்டைக்குரிய இரண்டாவது நகரவாக்க ஆட்சிமையங்கள் இரண்டையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. முதலாவது நகரவாக்க ஆட்சிமையமான பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. இரண்டாவது நகரவாக்க காலத்தில் இலங்கையின் பொருளாதார அமைப்பில் காணக்கூடிய இயல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**06.** 1. கண்டி இராசதானிக்குப் பாதுகாப்பு வழங்கிய நதியினையும் கணவாய்கள் இரண்டினையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புபடும் நபர்களை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக.

A. சீதாவாக்கை முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்க உதவி புரிந்த பிரதானி.

B. போர்த்துக்கேயரை இந் நாட்டில் இருந்து வெளியேற்றிய கண்டி ஆட்சியாளன்.

C. சீயம் நிக்காயப் பிரிவினை கண்டி இராச்சியத்தில் ஆரம்பித்த கண்டி ஆட்சியாளன்.

D. கி.பி 1766 ஆம் ஆண்டு ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்ட கண்டி ஆட்சியாளன். (04 புள்ளிகள்)

3. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத்தின் அரசுரிமையைப் பெற்ற போது எதிர் கொண்ட சவால்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அதனை வெற்றிகொண்ட முறையினை உதாரணத்துடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4. கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பில் காணப்பட்ட இயல்புகளை பின்வரும் அடிப்படையில் விளக்குக.

A. நிலவுரிமை

B. திருமண முறை (06 புள்ளிகள்)

**07.** 1. கீழே தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புபடும் பிரித்தானிய ஆளுநர்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A. இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர்.

B. கி.பி 1818 ஆண்டு சுதந்திர போராட்டத்தின் போது செயற்பட்ட ஆளுநர்.

C. கி.பி 1840 ஆம் ஆண்டு தரிசு நிலச் சட்டத்தினை பிறப்பித்த ஆளுநர். (03 புள்ளிகள்)

2. A. கண்டி அரசர்களுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதை நோக்காகக் கொண்டு வருகை தந்த பிரித்தானிய தூதுவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

B. பிரித்தானிய அரசின் பங்குபற்றுதலுடன் இலங்கையின் கரையோரப்பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஆட்சி முறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. கி.பி 1815 ஆம் ஆண்டு பிரித்தானியர்களினால் கண்டி இராச்சியத்தை இலகுவில் கைப்பற்றக்கூடியதாக அமைந்த ஒற்றுமை சீர்குலைவுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. கி.பி 1848 ஆம் ஆண்டு கண்டியில் ஏற்பட்ட சுதந்திர இயக்கம் பற்றி பின்வரும் தலைப்புக்களில் சுருக்கமாக விபரிக்க.

A. செல்வாக்கு செலுத்திய காரணிகள்

B. தலைமைதாங்கிய தலைவர்கள்

C. தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் (06 புள்ளிகள்)

## பகுதி III

**08.** 1. ஐரோப்பாவின் கல்வி மறுமலர்ச்சியின் இலக்கியத்துறைக்கு பங்களிப்பு செய்த இத்தாலிய எழுத்தாளர்கள் மூவரை கீழே அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவர்களில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

**(தாந்தே, தோமஸ்மூர், பெற்றாக், இராஸ்மஸ், பொக்காஷியோ)** (03 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றோடு தொடர்புடையவர்களை ஒழுங்கு முறையில் பெயரிடுக.

A. நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்.

B. மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான முக்கிய தகவலை முன்வைத்தவர்.

C. அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்.

D. ஞாயிற்றுத் தொகுதியில் கோள்கள் அனைத்தும் சூரியனை நீள் வட்டப் பாதையில் சுற்றுவதாகக் குறிப்பிட்டவர். (04 புள்ளிகள்)

3. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற மறுமலர்ச்சி இலங்கை மீது செலுத்திய தாக்கத்தினை பின்வரும் அடிப்படையில் விளக்குக.

A. அரசியல்

B. பொருளாதாரம்

C. சமூகப் பண்பாடு (06 புள்ளிகள்)

**09.** 1. பிரித்தானியாவில் நிலக்கரிப்படிவுகள் அதிகளவில் காணப்படும் பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2. கைத்தொழில் புரட்சிகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புபடும் நபர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A. ஜெனி இயந்திரம்.

B. உருக்கு உற்பத்தி உலை.

C. புகைப் படகு

D. நீராவி இயந்திரம்


**(ஜோன் கே, ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ், ஹென்றி போஸ்மர், ஹம்பிறி டேவி, ஆபிரகாம் டர்பி, தோமஸ் நியுகொமன், ரொபட் புல்டன், குக்லி மார்க்கோனி)** (04 புள்ளிகள்)

3. A. நில அடைப்பு இயக்கம் என்றால் என்ன. (02 புள்ளிகள்)

B. கைத்தொழில் புரட்சிக் காலத்தில் விவசாயத்துறையில் பாரிய மாற்றம் ஏற்பட செல்வாக்கு செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

4. கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கினால் இலங்கையின் **விவசாயம், போக்குவரத்து, தொடர்பாடல்** என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக. (06 புள்ளிகள்)

01. (அ) (I) சுட்டெண்:……………………………



01. (அ) (II)

